**இரத்தினபுரி மாநகர சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இரத்தினபுரி மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளை சட்டத்தின் (252 அதிகாரம்) 219 பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான்கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் இரத்தினபுரி மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின. கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்டநிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 37,248,283 கூட்டுத்தொகையான 15 கட்டிடங்கள், 02 ஏக்கர்கள் 18.5 பேர்ச் பரப்பளவான 02 காணிகள், தளபாடங்கள் மற்றும் பொருத்துகள், CCTV கெமரா கட்டமைப்பு மற்றும் வெகுமதியாக கிடைத்த வாசிகசாலைப் புத்தகங்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடங்களில் அகற்றப்பட்ட மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட 14 காணி மற்றும் கட்டிடங்களின் வாசிகசாலைப் புத்தகங்களின் பெறுமதியான ரூபா 231,025 சொத்துக்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |
| (இ) | நிர்மாணப் பணிகளுக்காக கடந்த வருடங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மூலப்பொருட்களின் கிரயம் ரூபா 1,095,610 மற்றும் நீர் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீர் மானிகளின் கிரயம் ரூபா 750,000 தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |
| (ஈ) | 02 பணிகளுக்காக ரூபா 591,910 தொகை கூடுதலாக மற்றும் ஏனைய | பதிவடுகள் பரீட்சிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டுக்கான | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | பணிகளுக்காக ரூபா 322,944 குறைத்தும் கடன்பட்டோர் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக கைத்தொழில் கடன் கொடுத்தோர் ஒதுக்கங்கள் ரூபா 8,114,333 கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |
| (ஊ) | கடந்த வருடத்திற்குரிய கணக்காய்வு கட்டணங்களான ரூபா 972,000 மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (எ) | கடந்த வருடங்களுக்குரிய பணிகளுக்காக ரூபா 11,108,551 நானாவித கடன் கொடுத்தோரின் கீழ் கூடுதலாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் ஆகியவற்றின் பெறுமதியான ரூபா 178,020 கூடுதலாக மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன், கடந்த வருடத்தில் ஏலமிடப்பட்ட வீதி செப்பனிடும் கருவியின் பெறுமதி ரூபா 1,000,000 நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |
| (ஐ) | மீளாய்வாண்டுக்குரிய ரூபா 2,531,669 கூட்டுத்தொகையான 09 செலவின உருப்படிகளுக்காக கடன் கொடுத்தோர் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |
| (ஒ) | உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு 2024 ஆம் ஆண்டின் போது செலுத்த வேண்டிய கடன் தவணைகள் மற்றும் வட்டி ரூபா 4,948,780 தொகை நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் கணக்கு நடவடிக்கைகளின் போது நிதிக்கூற்றுக்களில் சரியாக பதிவு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளமை. | - மேற்படி - |
| (ஓ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட கூட்டெரு இருப்பின் பெறுமதி ரூபா 631,005 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் கூட்டெரு இருப்பினை கணக்கு வைப்பதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது என்பது. | - மேற்படி - |
| (ஔ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட நீர் மானிகளின் பெறுமதி ரூபா 270,000 குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (க) | 09 கணக்கு விடயங்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரமான மீதிகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 70,191,607 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | இது நீண்ட காலமாக நிலவும் ஆரம்ப மீதிகளின் வேறுபாடாகும். எதிர்வரும் வருடத்தில் முடியுமான அளவில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வேறுபாட்டுக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| ரூபா 2,079,074,872 பெறுமதியான பேரேட்டுப் பதிவுகள் 100 இனை முறையாக அங்கீகரித்திராததுடன், நாளேட்டு உறுதிச்சீட்டுக்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பேரேட்டுப் பதிவுகள் 100 இற்கு முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பேரேட்டுப் பதிவுகள் முறையாக அங்கீகரிக்கப்பட வேண்டும். |

**1.6.3 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 101,531,877 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | பதிவேடுகளை நாளதுவரையாக பேணுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதுடன், தேவையானபோது ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த கணக்கு விடயங்களுக்கு உரிய தகவல்களை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | விரிவான பட்டோலைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நேர் ஊழிய அடிப்படையில் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது களஞ்சியத்திலிருந்து வழங்கப்படும் பொருட்கள் மற்றும் அவற்றின் பெறுமதிகளை இனங்காணக்கூடிய வகையில் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டினுள் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 4,205,032 பெறுமதியான 13 பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை சரியாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நேர் ஊழிய அடிப்படையில் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது களஞ்சியத்திலிருந்து வழங்கப்படும் பொருட்கள் மற்றும் அவற்றின் பெறுமதிகளை இனங்காணக்கூடிய வகையில் நடைமுறையொன்று தயாரிப்பதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்படுகதுடன், 13 பணிகளுக்காக செலவினங்கள் இனங்காணப்பட்டு அவற்கை கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பொருட்களை விநியோகிக்கும் போது முறையான பதிவேடு பயன்படுத்தப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) இற்கு முரணாக 2022 சனவரி 01 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 1,699,740 கூட்டுத்தொகையான 02 முற்பணங்கள் தீர்க்கப்பட்டிராததுடன், 2001 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 5,313,189 கூட்டுத்தொகையான காலாவதியான நானாவித வைப்புக்கள் நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு மற்றும் வைப்புக்களை தீர்ப்பனவு செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 77,075,195 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 61,809,296 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 35,700,000 | 35,811,543 | 32,284,460 | 39,878,569 | 28,085,000 | 29,408,399 | 24,999,555 | 39,481,893 |
| வாடகை | 78,990,000 | 61,612,508 | 59,030,279 | 41,708,638 | 87,915,328 | 58,595,955 | 58,863,454 | 26,269,758 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 18,556,000 | 18,511,110 | 15,134,679 | 7,910,175 | 3,628,700 | 3,206,128 | 3,206,128 | - |
| ஏனைய வருமானங் கள் | 78,061,000 | 74,082,280 | 77,594,480 | 9,154,106 | 262,023,300 | 67,858,974 | 53,620,308 | 10,709,264 |
| | 211,307,000 | 190,017,441 | 184,043,898 | 98,651,488 | 381,652,328 | 159,069,45 | 140,689,445 | 76,460,915 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்படியான நிலுவை வீதவரி மீதி ரூபா 39,878,569 ஆக காணப்பட்டதுடன், நிலுவைத் தொகை தொடர்பில் காலப் பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 21 வருடங்கள் பழமைவாய்ந்த மென்பொருட்களின் ஊடாக இந்த நிலுவை மீதிக்குரிய காலப் பகுப்பாய்வினை பெற்றுக்கொள்ள முடியாது என்பது. | காலப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இரத்தினபுரி நகரின் அங்கீகரிக்கப்பட்ட வீதிகளில் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணங்களை அறவீடு செய்தல் 2022 ஆம் ஆண்டின் முதல் 03 மாதங்களினுள் விலைக்கேள்வி முறைமையின் ஊடாக ரூபா 437,400 ஆன வருமானம் ஈட்ட முடியுமானதாக காணப்பட்டது. பின்னர், அந்த முறைமை மாற்றப்பட்டு சேர்க்கப்படும் வருமானத்தில் 50 சதவீதத்தினை வழங்கும் அடிப்படையில் அந்த பணி ஒப்படைக்கப்பட்ட காரணத்தால் 2022 ஆம் ஆண்டின் இறுதி 09 மாதங்களுக்காக கிடைத்த வருமானம் ரூபா 781,700 மாத்திரமாக காணப்பட்டது. அதனால் 2022 ஆம் ஆண்டுக்காக ரூபா 781,700 ஆன வருமானம் இழப்பாகியிருந்தது. | வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான கட்டணங்களை அறவீடு செய்யும் விலைக்கேள்வியில் விலைக்கேள்வியாளர் நீங்கியமையால் போதிய அளவிலான ஊழியர்கள் சபையிடம் காணப்படாத காரணத்தால் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 50 சதவீத முறையில் அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டமை. | அங்கீகரிக்கபபட்ட வீதிகளில் வாகனங்களை நிறுத்தி வைக்கும் கட்டணங்களை அறவீடு செய்தல் விலைக்கேள்வி முறைமைக்கமைய நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கழுத்துறை சிறுவர் பூங்காவில் பொருத்துவதற்காக 2021 ஆம் ஆண்டின் போது வெகுமதியாக கிடைத்த விளையாட்டு | இந்தக் சிறுவர் பூங்கா பொருட்களைத் திருப்பித் தருமாறு நன்கொடையாளருக்குத் | அதைத் மீள கையளிப்பதற்கும் அல்லது திறம்பட பயன்படுத்தவும் |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்களின் தொகுதியொன்று 2022 திசெம்பர் மாதத்தில் வெளூமதியாளருக்கு மீள கையளிக்கப்பட்டதாக எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2023 மே 02 ஆந் திகதி வரையிலும் இந்த உபகரணங்கள் களஞ்சியத்தினுள் விளைவற்றுக் காணப்பட்டது. | தெரிவிக்கப்பட்டாலும், தலைமைச் செயலாளர் மற்றும் ஆளுநரிடம் அது தொடர்பில் கலந்துரையாட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இரத்தினபுரி பழைய வெரலுப வீதியின் மீன் விற்பனை செய்யும் 06 நபர்கள் குற்றவாளிகளாக நீதிமன்ற தீரப்பு கிடைத்திருந்த போதிலும், வர்களை அகற்றுவதற்கு 2023 ஏப்ரல் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், மீன் விற்பனை நிலையத்தில் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்படும் வரையிலும் அவர்கள் அகற்றப்படாதிருக்க மாநகர சபை தீர்மானம் எடுத்திருந்த காரணத்தால் வழக்கு நடவடிக்கைகளுக்காக ரூபா 316,500 செலவிடப்பட்டமை பிரச்சினைக்குரியதாக காணப்பட்டது. | மீன் விற்பனைக்காக நிர்மாணிக்கப்படவுள்ள வளாகத்தின் நிர்மாணப் பணிகள் முடியும் வரை அவற்றை அகற்றுவதில்லை என மகா மாநகர சபை தீர்மானம் எடுத்துள்ளது. | சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன், அது தொடர்பான தீர்வுகள் பொதுச் சபையால் தீர்மானிக்கப்பட வேண்டும். |

**3.2 பெறுகைகள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினுள்ளான நவீனமயப்படுத்தல்கள் மதிப்பிடப்பட்டிராததுடன், மேற்கொள்ளப்படாத பணிகளுக்காக ரூபா 50,047 தொகையும், அமைப்புக்குறிப்பீடுகளுக்கு இணங்காத பணிகளுக்காக ரூபா 311,700 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த பெறுமதியை இறுதிப் பட்டியலிலிருந்து கழிக்க முடியும். மதிப்பீடொன்று தயாரிக்கப்படாததுடன், திட்டங்கள் மற்றும் அமைப்புக்குறிப்பீடுகள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு உரியதாக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. | மிகைக் கொடுப்பனவுகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மாநகர சபைக் கட்டிடத்தின் மின்சாரக் கட்டமைப்பின் பழுதுபார்த்தலின் போது மின்சார உபகரணங்களுக்காக ரூபா 5,265,787 தொகை மற்றும் 1046 மனித நாட்கள் செலவிடப்பட்டிருந்தது. எனினும், அதற்கு முறையான திட்டமொன்று (Electric Drawing) மற்றும் கிரய | கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதனை பட்டயம் பெற்ற மின் பொறியியலாளர் அங்கீகரித்திருக்கவில்லை என்பது. மின்சாரக் கட்டமைப்பிற்காக பின்னர் தயாரிக்கப்பட்ட திட்டம் கணக்காய்வுத் தேவைக்காக | பணியை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிய திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு பட்டயம் பெற்ற மின் பொறியியலாளர் அங்கீகரித்திருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை. | |
| (இ) | இரத்தினபுரி பொதுச் சந்தைக் கட்டிடத்தின் கூரைக்காக ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்ததாரரின் கோரிக்கையின் அடிப்படையில் உடன்படிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. இதற்காக பெறுகைகள் அறிவித்தலை பிரசுரிப்பதற்காக செலுத்திய ரூபா 151,632 தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது. | ஒப்பந்ததாரர் பணியை நிறைவேற்ற முடியாதென குறிப்பிட்டுள்ளமையால் உடன்படிக்கையை இரத்துச்செய்ய நேர்ந்துள்ளது என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். | ஒப்பந்தத்தை மீறிய ஒப்பந்ததாரரை கறுப்பு பட்டியலிட்டு, அடுத்த விலைக்கேள்வியாளரை கொண்டு குறித்த பணியை செயற்திறனாகவும் விளைத்தினாகவும் நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஈ) | அதி சக்திவாய்ந்த டிரான்ஸ்போமர் உதிரிப்பாகங்களை பொருத்துவதற்காக சபையின் வளாகத்தின் முற்புறம் நிர்மாணிக்கப்பட்டிருந்த சிறிய அறை பயன்பாட்டுக்கு எடுக்கப்படாது 2022 ஆம ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்டிருந்த காரணத்தால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 145,155 தொகை விளைவற்ற செலவினமாகியிருந்தது. | கொன்கிறீட் தூணின் அடிப்படையில் மின்சாரக் கம்பிகள் பொருத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மின்சாரக் கம்பிகள் உயர் அமுத்த கம்பித் தூணிலேயே பொருத்தப்பட்டிருந்தன. அதன் காரணமாக அந்த சிறிய அறையை நீக்க தீர்மானம் எடுக்கப்பட்டது. | தேவைப்பாடுகள் சரியாக இனங்காணப்பட்டு நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. |

**3.4 வாகன முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 09 வாகனங்களில் அரச இலச்சினை மற்றும் சபையின் பெயர் இடப்படாததுடன், ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் இருந்த 03 வாகனங்களை அகற்றும் பணிகள் 2022 டிசம்பர் வரை நிறைவு பெறவில்லை. | இனி வரும் காலங்களில் வாகனங்களில் அரச இலட்சிணை மற்றும் நிறுவனத்தின் பெயர் பொறிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், சம்பந்தப்பட்ட வாகனங்களை ஏலம் விட விலைக்கேள்வி கோரப்பட்டும் குறைந்தபட்ச மதிப்பீடு கிடைக்காததால், இரண்டாவது முறையாக விலைக்கேள்வி கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தொடர்புடைய சுற்றறிக்கை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 09 மோட்டார் சைக்கிள்கள் எழுத்துப்பூர்வ சாட்டுதலின்றி சபையின் 09 ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது. | எதிர்காலத்தில், வருடாந்திர ஒப்பந்தத்தின் கீழ், தேவை பரிசீலிக்கப்பட்டு, மோட்டார் சைக்கிள்களை வழங்குவதற்கான மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும். | குறித்த மோட்டார் சைக்கிள்களை எழுத்துப்பூர்வமாக சாட்டுதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 2,410,000 செலுத்தி 2021 பெப்ரவரி மாதத்தில் சபைக்குச் சொந்தமான கம்பாக்டர் பழுதுபார்க்கப்பட்ட போதிலும், 2022 ஜனவரியில் அது செயலிழந்துவிட்டது. உத்தரவாதக் காலத்தின் போது ஏற்பட்ட குறைபாடுகளை சரி செய்யுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் கோரப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை அவை திருத்தப்படவில்லை. | உத்தரவாதக் காலத்தின் போது ஏற்பட்ட குறைபாடு காரணமாக கம்ப்பெக்டர் வாகனம் இயங்க முடியாத நிலையில் இருந்தது. எனவே, இந்த வாகனம் பழுது பார்க்க பரிந்துரைக்கப்பட்டு, தற்போது பழுது நீக்கும் பணி நடந்து வருகிறது. | உரிய நிறுவனத்திடமிருந்து துரிதமாக பழுதுபார்க்க வேண்டும். |

## 3.5 வெளிப்படையான மோசடிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கலப்பு வருமான பிரிவின் பெண் உத்தியோகத்தர் ஒருவரால் கடை வாடகை ரூபா 192,000 மோசடி செய்யப்பட்டிருந்ததுடன், அவரால் குற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | ஆரம்ப விசாரணை சப்ரகமுவ மாகாண சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதி மோசடிகள் தொடர்பில் ஒழுக்கக் கோவைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |